REGD. NO. M. 6311 ★ தனிப்பிரதி 0—1—0. (7 காசுகள்) ★ ஞாயிறுதோறும் 10 பக்கம் ★ PHONE: 85090

# நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 6உ செவ்வாய் (22—10—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 7உ புதன் (23—10—57) [இதழ் 111

## இருதயத் துடிப்பைமீட்டும் மின்சாரக் கருவி!

★

வாஷிங்டன்—

நின்றுபோன இருதயத்துடிப்பை மீண்டும் பெறவோ அல்லது இருதயத் துடிப்பு குறைந்து வருவதைப் பலப்படுத்தவோ, எளிய—பாதுகாப்பு மிகுந்த, நம்பிக்கையான சிகிச்சை அளிக்கும் ஒரு மின்சாரக் கருவியை விஞ்ஞானிகள் ஏற்படுத்தியுள்ளனராம்!

துடிப்பு நின்றுபோன இருதயத்துக்குள் மின்சார சக்தியைப் பாய்ச்சும் இரு சாதனங்கள் இப்புதுக் கருவியில் இருக்கின்றனவாம்!

# 'வாழ்வு--போராடித்தானே பெற வேண்டியதா யிருக்கிறது?'

## 'போர் முடிந்து 12 ஆண்டுகளாகி விட்டன; விலைவாசிகளை இறக்க சர்க்காரால் முடியாமற் போனது ஏன்?

### 'விலைவாசிகளை இறக்கு-இன்றேல் கூலியை உயர்த்து!'

## 'தொழிலாளரின் இன்றையக் கோரிக்கை அதுவே!'

### பாங்கி ஊழியர்களிடையே பொதுச்செயலாளர் முழக்கம்

"நடுத்தர மக்கள்தான் இன்று மிகமிக அச்சத்துக்கு ஆட்பட்டு, வேதனைக்குரியவர்களாக இந்த நாட்டிலிருக்கிறார்கள். அதிகப்படியான கவலையை அகத்திலும் முகத்திலும் தாங்கிக் கொண்டு, இன்றைக்குக் காட்சியளிப்பவர்கள் அவர்கள்தான். கையே தலையணையாக, வானமே கூரையாகக்கொண்டு வாழ்க்கை நடத்தும் மக்கள், இன்று ஒரு தனி வகுப்பாகவே உருவாகி வருகிறார்கள் இத்த நாட்டில் !

"சொன்னதைச் செய்துவிட்டு, கொடுத்ததை வாங்கித்தின்று வாழ்ந்த காலம் ஒன்றிருந்தது. அது இறந்த காலம் ; 'உழைப்புக் கேற்ற ஊதியம் கொடு' என்று கேட்டு வருவதை நிகழ்காலத்திலே பார்க்கிறோம்.

"சக்திக்கேற்றபடிதான் உழைப்பேன்; என் தேவைக்கேற்ற ஊதியம் கொடு' என்று கேட்கிற காலம் எதிர்காலமாக இருக்கும்; கூனனாயிருந்தாலும் சரி, நொண்டியாயிருந்தாலும் சரி—குருடனாயிருந்தாலும் சரி, செவிடனாயிருந்தாலும் சரி—முடனாயிருந்தாலும் சரி, முட்டாளானாலும் சரி—அவனும் இந்த நாட்டில் வாழவேண்டும்; அதற்கான வருமானம் தேவை.

"ஒருவன் தன் சக்திக்கேற்ற அளவுதான் உழைப்பான்; அவன் தேவைக்கேற்ற ஊதியம் அவனுக்குக் கொடுக்கப்படவேண்டும். இதைத்தான் எதிர்காலத்திலே கேட்கப் போகிறார்கள்; இதைப் போராடிப் போராடித்தான் பெறவேண்டும் இந்த இந்தியத் துணைக்கண்டத்திலே! வாழ்வையே போராடித்தான் பெற வேண்டிய நிலை இந்திய அரசியல்—சமுதாய—பொருளாதாரத் துறையிலே நாம் பாக்கிறோம்"

—இவ்வாறு, 18-10-57 மாலை சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த சென்னை மாநில பாங்கி ஊழியர்கள் கூட்டத்தில் பேசிய தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"உணர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பேர்போன வங்கத்திலே இருக்கின்ற அந்த உணர்ச்சியும், எழுச்சியும் ஓரளவு தமிழகத்திற்கும் உண்டு என்பதைக் காட்டுமுகத்தான், இங்கு இத்தகைய நோக்களில், பல கருத்துக்கொண்டவர்களும் ஒன்றுபட்டு, அனைவரையும் ஒன்றுபடுத்தி, கோரிக்கையை வற்புறுத்தி, கிளர்ச்சிகள் செய்வது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

"பாங்கி ஊழியர்களாக இருக்கின்றவர்களனைவரும் நடுத்தர மக்களாகவே, மிக நெருக்கடியான ஒரு கட்டத்திலே இருக்கின்றார்கள்.

"இன்றைக்கு வாழ்க்கைச் செலவு மிக உயர்ந்துவிட்டது; வருமானம் அந்த அளவுக்குப் பெருகவில்லை என்ற நியாயமான காரண காரியங்களை எடுத்துச்சொல்லி, நீங்கள் உங்கள் கோரிக்கைகளை வற்புறுத்துகிறீர்கள். ஒன்று—'என்னை, அந்த அளவுக்கு உயர்த்து; அல்லது வாழ்க்கைச் செலவை என் வருமான அளவுக்கு இறக்கு; இதில் எதையாவது ஒன்றைச் செய்'—என்பதுதான், இன்றையத் தொழிலாளரின் கோரிக்கை.

இந்த நாட்டில் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 265. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறி முடிந்தால், இது ரூ. 281 ஆக உயருமாம். இந்த இழிநிலையை மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், அந்த நாடுகளிலெல்லாம் ரூ. 5,000, ரூ. 6,000, ரூ. 7,000 என்றிருக்கின்றன.

"இந்த நாட்டிலே, வருமானம் உயருவதற்கு இவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், கூடை முறம் முடைதல்; கோரைப்பாய் ஈச்சம்பாய் பின்னுதல், பானை பண்ணுதல் இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். கூடையையும், முறத்தையும், பானையையும் எவ்வளவு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய முடியும்? இவற்றை எந்த நாட்டில் வாங்குவார்கள்? வேண்டுமானால், வெளிநாட்டுக்காரன் இங்கு வரும்போது, அவனை அழைத்துக்கொண்டுவந்து, 'எங்கள் நாட்டுக் கோரைப்பாயைப் பார்; பானை செய்வதைப் பார்' என்று காட்டலாம்; அவனும், இவற்றைப் பார்த்து, 'கையாலேயா இவ்வளவு மிருதுவாகப் பாய் முடைகிறீர்கள்? கையாலேயா இவ்வளவு அழகாகப் பானை செய்ய முடிகிறது?' என்று கேட்டு, அதைப் பார்த்து ரசித்துப் பாராட்டிவிட்டு, ஏதோ இரண்டு மூன்று பானைகளை வாங்கித் தன் நாட்டுக்கு எடுத்துச் செல்வான். இதைத் தவிர, எத்தனை ரூபாய்க்கு பானையும், பாயும் வாங்கிவிடுவார்கள், வெளிநாட்டுக்காரர்கள்?

"அவரவர் கையாலேயே செய்யும் தொழில் என்று கூறி இந்த நாட்டு ஆட்சியாளர்கள், அத்தொழில்களை வளர்த்து வருவதாகக் கூறுகிறார்கள்; இதில் மயங்கினால் நாட்டு வாழ்வு எப்படி உயரும்? நாமும் உலகத்தோடு ஒட்டிவாழவேண்டுமானால், நம் வருமானம் உயரவேண்டும்.

"பாங்கிகளிலே கிடைக்கின்ற இலாபத்தைக்காட்டி—முதலாளிகள் பெறுகின்ற வருமானத்தைக் காட்டி—'பிணந்தின்னி'க் கழுகுகளையும் காட்டி-தாங்கள்உழைத்த உழைப்பின் பலனைக் காட்டி, பாங்கி ஊழியர்கள் சம்பள உயர்வு கேட்கிறார்கள். இதைக் கொடுப்பதிலே தடையென்ன?

"கிடைக்கின்ற ரூ. 8 கோடி இலாபத்திலே அவர்கள் கேட்டதன் மொத்தத் தொகையே ரூ. $1\frac{1}{2}$ கோடிதான்; இதைக் கொடுப்பதனால் என்ன குறைந்துவிடும்? என்ன நஷ்டம் ஏற்படும்? வருகின்ற இலாபத்திலே வேண்டுமானால் கொஞ்சம் நஷ்டம் ஏற்படலாம்; அவ்வளவுதான்!

"வங்காளத்திலே, உள்ள பாங்கி முதலாளிகள் கொஞ்சம் கருணைகாட்டி, சம்பளத்தில் சிறிது அதிகப்படுத்திக் கொடுக்க முன்வருவதையும் தடுத்து அவர்களை இழுத்துப் பிடிக்கிறது, இந்திய சர்க்கார்! அவர்கள் கொடுத்தால், பிறகு, தானும் தனது ஊழியர்களுக்குக் கொடுக்கவேண்டுமே என்ற காரணத்தால் கொடுப்பதையும் தடுக்கிறது!

"நியாயமான — நேர்மையான அடிப்படையில்தான் கேட்கிறார்கள், பாங்கி ஊழியர்கள்; வாழ்க்கைத்தரப் புள்ளி இவ்வளவு ஏறினால், வாழ்க்கைச் செலவு இவ்வளவு உயரும் என்று எந்த சர்க்கார் புள்ளிவிவரம் போட்டுக் காட்டிற்றோ, அந்தச் சர்க்காரிடமே இந்தப் பாங்கி ஊழியர்கள் தங்கள் வாழ்க்கைச் செலவுக்குத் தகுந்தபடி ஊதியத்தை உயர்த்தும்படி கேட்கிறார்கள். இதைத் தர மறுக்கும் சர்க்கார், ஒரு ஜனநாயக சர்க்காராக இருக்கமுடியுமா?

"பஞ்சப்படி என்பது, போர்க் காலங்களிலும், மற்றும், நெருக்கடி நேரங்களிலும்தான் கொடுக்கப்படுவது வழக்கம். இரண்டாவது உலகப் போர் நடந்த காலத்தில், சாமான்கள் போக்குவரத்தில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக விலைவாசிகள் உயர்ந்தன; அதன் காரணமாக எல்லா நாடுகளிலும் ஊழியர்களுக்கு, அவர்கள் சம்பளத்துடன் பஞ்சப்படியும் சேர்த்துக் கொடுத்தார்கள்; இப்பொழுது போர் முடிந்து கிட்டத்தட்ட 12 ஆண்டுகள் ஆகின்றன; ஆனால், 'மழைவிட்டும் தூவானம் விடவில்லை' என்பதைப்போல, இந்த நாட்டில் மட்டும் இன்னும் விலைவாசிகள் குறைந்தபாடாயில்லை. எனவே, பஞ்சப்படியும் நீடித்துக் கொடுக்கப்பட்டுவருகிறது.

"மற்ற நாடுகளிலெல்லாம் பஞ்சப்படி கொடுப்பது, போர் முடிந்தவுடனேயே நிறுத்தப்பட்டுவிட்டது. இந்த நாட்டில் நீடித்துக்கொண்டு வருவதற்குக் காரணம் என்ன? போர் முடிந்து, இந்த 12 ஆண்டுகளாக விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை, இந்த சர்க்காரால்! இந்த விலைவாசி உயர்வு என்பது நிரந்தரமாகிவிட்டது—இயற்கையாகிவிட்டது!

"எனவே, விலைவாசி ஏற்றத்துக்குத் தக்கவகையிலே தொழிலாளர்களின் வருமானம் உயர்த்தப்படவேண்டும். இனியும் பஞ்சப்படி என்னும் பேரால் ஒன்று கொடுத்துக் கொண்டிருப்பதிலே பொருளில்லை! அதை நீக்கிவிட்டு,

(4-ம் பக்கம் பார்க்க)

பவனி புறப்படு முன்

## தாய்மொழி காத்த மாவீரர்களுக்கு அஞ்சலி



13—10—57-ல், சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் புறப்படுமுன், தமிழ் காக்கத் தங்கள் இன்னுயிரீந்த தாளமுத்து—நடராசன் கல்லறைக்கு ஊர்வலத் தலைவர் கே. கோவிந்தசாமி அவர்களும் பிறரும் மலர் வட்டம் சூட்டி, வீரவணக்கம் செலுத்தும் காட்சி.

நம் நாடு

சென்னை 22—10—'57 செவ்வாய்

# வெற்றி ஏற்படவேண்டும்!

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகி கேரளப் பகுதி வழியே ஓடி அரபிக் கடலில் கலந்துவிடும் பரம்பிக் குளம், அலியாறு, சோலையாறு, நீராறு முதலிய ஆறுகளின் நீரைத் தமிழகத்தின் விவசாய வளத்திற்கும், மின்சாரப் பெருக்கத்திற்கும் எப்படிச் சிறந்த முறையில்— கேரளத்திற்கு அணுவளவு கேடும் நேரவிடாமல்—பயன்படுத்த வேண்டும் என்பதை நாம் பன்முறை வற்புறுத்தி வந்திருக்கின்றோம். நமக்குள்ள மின்சாரப் பற்றாக்குறையும், அதன் விளைவாகத் தொழில் துறையில் இருந்து வரும் தேக்கமும், மேற்படி நீரை உடனடியாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் நாம் கூற வேண்டியவர்களானோம். அதுவுமன்றி, போதிய நீர்வளம் நம்மிடமின்மையாலும், இருக்கின்ற குறிப்பிடத்தகுந்த நீர்த் துறைகள் அனைத்தும் கூடுமானவரை பயன்படுத்தப்பட்டுவிட்டதினாலும், நம்முடைய விவசாயத்தை விரிவாக்கி உணவு உற்பத்தியைப் பெருக்க, மேற்படி நீர் நிலைகளைப் பயன்படுத்த உடனடியாக சென்னை அரசாங்கம் முயலல் வேண்டும் என்றும் நாம் பன்னிப்பன்னிக் கூறலானோம்.

இந்தத் தொடர்பில் மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காகவே, ஆந்திர மண்டலத்தில் பாய்ந்தோடும்—ஆந்திரம் பயன்படுத்திக்கொண்டது போக எஞ்சிய--கோதாவரி தண்ணீரையும் தமிழகத்திற்குக் கொண்டு வரும் முயற்சியைமேற்கொள்ள சென்னை அரசாங்கத்தை வேண்டி வந்துள்ளோம். இவ்வகையில் ஆந்திர அரசாங்கமும் இணங்கிவர விருப்பம் தெரிவித்திருப்பதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

நமது கோரிக்கைக்கு இப்பொழுதுதான் உயிரூட்டம் ஏற்பட்டு இருக்கிறது. சென்னை அரசாங்கம் இவ்வகையில் செயல்பட இரண்டு தினங்களுக்கு முன்புதான் முன்வந்து இருக்கிறது.

துவக்கப் பேச்சு எதிர்பார்க்கின்ற பலனை அளிப்பதாகவே இருக்கின்றது. பேச்சும் செயலுருவம் பெற்று, தமிழகத்தின் நலமும் பெருகுவது மேலும் சில நாளைக்கு நீடிக்கக் கூடும் என்ற உண்மையும் விளக்கமாகிறது.

நீரின் முழு அளவும், நியாயமான தேவையும், பயன்படுத்தும் நிலையும் நுணுகி ஆராய்ந்து அறிவது என்றும், அவ்வாறு அறிவதற்கான முயற்சியில் இன்று முதல் ஈடுபடுவது என்றும் துவக்கப் பேச்சில் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இம்முடிவு கிடைத்தவுடன் இன்னும் ஒரு திங்களுக்குள் மீண்டும் கேரள—தமிழக அமைச்சர்கள் ஒன்றுகூடி, இறுதியான முடிவுக்கு வருவர் என்றும் தெரியவருகிறது.

நடந்துள்ள துவக்கப் பேச்சு குறித்து தமிழக முதலமைச்சர் தமது கருத்தைத் தந்துள்ளார். அதாவது, பேச்சு 'திருப்திகரமாக உள்ளது' என்பதே அவர் கருத்தாகும். முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளது போன்றே துவக்கப் பேச்சு முழு வெற்றி பெற்று, தமிழகம் செல்வச் செழுமை பெற்றால் நமக்கும் இரட்டிப்பு 'திருப்தி'யாகும்.

கேரள மண்ணில் ஓடுகின்ற மேற்குறித்துள்ள ஆறுகள் அனைத்தும் சென்னை மாநிலத்திலேயே உற்பத்தியாகின்றன; எனவே, அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த நமக்கு உரிமை இருக்கிறது என்று சென்னை முதலமைச்சர் கருத்தறிவித்துள்ளார். கேரள மக்களுக்குச் சொந்தமான தண்ணீரைத்தான் சென்னை கேட்டுக்கொண்டிருக்கின்றது என கேரள மக்களில் சிலரும், தமிழ் மக்களில் சிலரும் எண்ணிக்கொண்டிருப்பதாகவும், அவ்வெண்ணம் தவறானது என்ற உண்மையைக் கேரள மக்கள் உணரச் செய்துவிட்டால், இத்தண்ணீர் பிரச்சினை இலகுவாகத் தீர்ந்துவிடும் என்றும் முதலமைச்சர் காமராசர் கருத்தறிவித்துள்ளார்.

உண்மை எதுவானாலும் பிரச்சினை தீர்ந்தாக வேண்டும்; தமிழகம் சீர்பட வேண்டும்; தமிழகத்தில் செல்வப் பெருக்கேற்பட வேண்டும்; வறுமை தொலைய வேண்டும்; வாட்டம் போக வேண்டும்; எங்கும் மகிழ்ச்சி தாண்டவம் புரிய வேண்டும்.

அதற்கு இந்தத் தண்ணீர்ப் பிரச்சினை முதற்படி. வெற்றி ஏற்பட வேண்டும்.

## சேரி ஒழிப்புப் பற்றி பண்டித நேரு

"சேரி ஒழிப்பு சரியானபடி திட்டமிடப்பட்டு, மக்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்படவேண்டும்"

என்று, பண்டித நேரு டில்லியில் தெரிவித்துள்ளார்.

## கனடா கோதுமை

### இந்தியாவுக்குக் கிடைக்கும்

பம்பாய், அக். 21—

இந்தியாவின் உணவுப் பஞ்சத்தைக் குறைக்க கனடாவிடம் இந்தியப் பேரசு கோதுமை கேட்டுள்ளதாகவும், கனடாவும் உதவியளிக்கக்கூடும் என்றும் கனடா அமைச்சர் பிரௌன் கூறியுள்ளார்.

# கோதாவரியில் நிகழ்ந்த கோரப் படகு விபத்து

## ஓட்டைப் படகும், கண்காணிப்பு இல்லாமையும் காரணங்கள்

ஐதராபாத், அக். 20—

இந்த ஆண்டு இராம நவமி கொண்டாட்டத்தின் போது பத்ராசலம் அருகே கோதாவரி நதியில் சென்றுகொண்டிருந்த படகுகள் இரண்டு கவிழ்ந்து 200 பேர்வரை பலியாயினர் அல்லவா? அதுபற்றி விசாரணை நடத்த ஆந்திர மாநில சர்க்கார் ஒரு குழு நியமித்திருந்தது.

அந்தக் குழுவினரின் அறிக்கை இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது.

'படகுப் போக்குவரத்தில் உள்ள கோளாறுதான் விபத்திற்குக் காரணம்' என்று குழுவினர் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

"சுமார் 56 பேர்கள் மட்டுமே பிரயாணம் செய்யக்கூடிய இரண்டு படகுகளில் 300 யாத்திரிகர்கள் ஆடுமாடுகளைப் போல அடைக்கப்பட்டிருந்தனர்; பெரிய படகில் சிறு ஓட்டை இருந்திருக்கிறது; நடு ஆற்றில் போய்க்கொண்டிருந்தபோது படகை நிறுத்திவிட்டு, படகோட்டிகள் கட்டணம் வசூலிக்க முற்பட்டிருக்கின்றனர். அந்தச் சமயத்தில், படகிலிருந்த ஓட்டை வழியாகப் படகிற்குள் தண்ணீர் புகுந்து படகு மூழ்கிவருவதைக் கண்ட ஒருவர், படகு மூழ்குவதாகக் கூச்சல் போட்டிருக்கிறார்; திடுக்கிட்டுப்போன பிரயாணிகள் பரபரப்படைந்த நிலையில், ஒரு படகிலிருந்து மற்றதிற்குத் தாவ முற்பட்டிருக்கின்றனர்; விளைவு, கோரமான விபத்தாக இருந்திருக்கிறது"

இவ்வாறு, விசாரணைக் குழுவினர் தெரிவித்திருக்கின்றனர்.

"எவ்வளவு முடியுமோ அவ்வளவு சம்பாதித்துவிட படகோட்டிகள் நினைத்ததே விபத்திற்கு மிக முக்கியமான காரணம்; 56 பேர்களுக்கு மட்டுமே உரிய இடத்தில் 300 பேர்வரை ஏற்றப்பட்டதும், இரண்டு கட்டணம் நான்களாவாக வசூலிக்கப்பட்டதும், காசு சம்பாதித்துவிட நினைத்தார்கள் என்பதற்குச் சாட்சியாகும்"

என்றும், அந்தக் குழு தெரிவித்திருக்கிறது.

"படகுப் போக்குவரத்திற்கான விதிமுறைகள் எவையும் ஒழுங்காக இல்லை. படகின் தன்மை, ஆற்றைக் கடக்கும் அதன் ஆற்றல், எத்தனை பேர் ஏற்றிச் செல்வது என்பன போன்ற எல்லாம் படகோட்டிகளின் முடிவுக்கே விடப்பட்டிருக்கின்றன.

"இவை குறித்து சர்க்காரின் கண்காணிப்பு எதுவும் இருக்கவில்லை. எதிர்காலத்திலேனும், இந்த விதிகள் தகுந்த முறையில் கடுமையானதாக்கப்பட்டு போதுமான கண்காணிப்பு இருக்குமாறு செய்யவேண்டும்"

என்றும், விசாரணைக் குழுவினர் கூறியுள்ளனர்.

### பலியானோர் கும்பத்திற்கு நிதி உதவி

விபத்தில் பலியானவர்களின் குடும்பத்திற்கு மாநில சர்க்கார் நஷ்டஈடு தரவேண்டும் என்றும் விசாரணைக் குழு தெரிவித்திருக்கிறது.

அதன்படி, 15 குடும்பங்களுக்கு மொத்தம் ரூ. 1,020 நஷ்டஈடு தர ஆந்திர அரசாங்கம் முன்வந்துள்ளது.

# தொழில் நீதிமன்ற முடிவுகளை அமுலாக்க!

## மத்திய அரசாங்கம் சட்டம் இயற்றுமாம்

சென்னை, அக். 21—

"தொழில் நீதிமன்றங்களின் முடிவுகள் கண்டிப்பாக அமுல் நடத்தப்படவேண்டும் என்று மத்திய அரசாங்கம் சட்டம் கொண்டுவரும்"

என்று, சென்னை தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

வழிக்கு வராமல், இடக்கு செய்துவரும் முதலாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாசரின் எதிரிகள்

## தண்டனை விதிக்கப்பட்டனர்

கெய்ரோ, அக். 21—

எகிப்தின் மக்கள் தலைவர் நாசரைக் கொலைசெய்ய முயன்றதாகவும், அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்ட ஒரு இராணுவ அதிகாரி உள்பட 4 பேருக்கு ஆயுள் தண்டனையும், 2 முன்னாள் அமைச்சர்கள் உள்பட 5 பேருக்கு பலதரப்பட்ட தண்டனையும் விதிக்கப்பட்டு, இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# 'காங்கிரஸ் சர்க்கார் பொய் சொல்லி மக்களை ஏமாற்றுகிறது'

## உள்ள சட்டத்தையே அமுல் செய்யாதவர்கள் புதிய சட்டம் பற்றிப் பேசும் விந்தை

### மைசூர் சட்டசபையில் குற்றச்சாட்டு

பெங்களூர், அக். 19—

"புரட்சிகரமான நிலச் சீர்திருத்தம் செய்யப் போவதாகவும், சோஷலிச வடிவமான சமூகம் அமைக்கப் போவதாகவும் காங்கிரஸ் சர்க்கார்கள், மக்களை பொய் சொல்லி ஏமாற்றி வருகின்றன"

என்று, மைசூர் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சாட்டியிருக்கிறார்.

"சட்டப் புத்தகத்தில் குடிவாரச் சட்டம் ஒன்றிருக்கிறது. அதில் உள்ள கடுமையான விதிகளையும் பொருட்படுத்தாமல் நிலப்பிரபுக்கள், தங்களிஷ்டப்படி விவசாயிகளை வெளியேற்றி வருகின்றனர். இந்தச் சட்டங்களைக் கூட ஒழுங்காக அமுல் செய்யாமல் நிலச் சீர்திருத்தம்பற்றிப் பேசுவதில் பலன் இல்லை"

என்று அவர் எடுத்துரைத்திருக்கிறார்.

# இருமொழி மாநில அமைப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்துக!

## குசராத் மக்களுக்கு வேண்டுகோள்

அகமதாபாத், அக். 21—

இருமொழி பம்பாய் மாநில ஏற்பாட்டினை எதிர்த்தும் மகா குசராத் மாநில அமைப்புக் கோரிக்கையை வற்புறுத்தியும் வரும் நவம்பர் முதல் தேதியன்று சௌராட்டிரம், குசராத், கட்ச் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்துமாறு, மகா குசராத் ஜனதா பரிஷத் தலைவரான இந்துலால் யக்னிக் எம். பி. அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறார்.

"இருமொழி பம்பாய் ஏற்பாட்டினை மக்கள் வெறுக்கிறார்கள் என்பதை நடைபெறும் உபதேர்தல்கள் அனைத்திலும் காங்கிரஸ் தோல்வியுற்று வருவதிலிருந்து அறியலாம்"

என்றும், அவர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

# 'பக்தூனிஸ்தான்' கோரிக்கையை ஏற்காவிட்டால் நேரடி நடவடிக்கை'

## பாக். சர்க்காருக்கு கபார்கான் எச்சரிக்கை

லாகூர், அக். 20—

"'பக்தூனிஸ்தான்' வேண்டுமென்ற பட்டாணியர்களின் கோரிக்கையை பாகிஸ்தான் சர்க்கார் நிறைவேற்றித் தராவிடின், நேரடி நடவடிக்கையில் ஈடுபட நேரிடும்"

என்று, கான் அப்துல்கபார்கான் எச்சரிக்கைவிடுத்திருக்கிறார்.

அபத்தோபாத் நகரில் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், "மேற்கு பாகிஸ்தானை ஒரே மாநிலமாக வைத்திருப்பதைத் தனித்தனியாகப் பிரிப்பது என்ற தீர்மானம் தேசிய சட்டசபையில் வரும்போது ஆதரிப்போம் என தேசிய அவாமி கட்சிக்குத்தந்த வாக்குறுதியை குடியரசுக் கட்சி மீறுமானால், நான் ஒரு நேரடியான போராட்டத்தில் ஈடுபட உத்தேசித்திருக்கிறேன்" எனவும் அவர் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

## பம்பாய் நிறுவனத்திற்கு!

### அமெரிக்கப் பாங்கி கடனுதவி

பம்பாய், அக். 21—

ரேயான், டயர் உற்பத்தி செய்ய பம்பாய் ரேயான் நிறுவனத்திற்கு 18 இலட்சம் டாலர் கடன் உதவியளிக்க அமெரிக்கப் பாங்கி முடிவு செய்துள்ளது.

# அபிவிருத்தி வேலைகள்

## 'கிராம மக்களிடம் ஒப்படைக்க வேண்டும்'

### திட்டக் குழு முடிவுகள்

புதுடில்லி, அக். 21—

இப்போது உள்ள மாவட்ட நிர்வாக அமைப்பை ஆராய்ந்து திட்ட அமுலின் பொறுப்பை வட்டாரவாரியாக ஒப்படைக்க ஒரு குழுவை அமைத்திருந்தது திட்டக் குழு; அந்தக் குழு தனது முடிவுகளை அறிவித்துள்ளது.

கிராமப் பகுதிகளில், திட்டத்திலுள்ள அபிவிருத்தி வேலைகளை பொறுப்புடன் ஏற்று நடத்தத் தீவிர பங்கு கொள்ளக்கூடிய ஜனநாயக நிறுவனங்களை ஏற்படுத்தவேண்டும் என்று அந்தக் குழு முக்கியமாக வலியுறுத்திக் கூறியுள்ளது.

அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்ற இப்போதுள்ள மாவட்ட ஆட்சிமன்றங்கள் போதாது என்று குழு தெரிவித்துள்ளது.

மாவட்ட மன்றங்களுக்குப் பதிலாக 'பஞ்சாயத்துக்கள்' நிறுவ வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பஞ்சாயத்துக்கள் சட்டபூர்வமானதாகவும், ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களைக் கொண்டதாகவும் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

# ‘ஐந்தாண்டுத் திட்டத்தில் கைவிடப்படுபவைகள்’

## ‘தென்னாட்டுத் திட்டங்களாகவே இருக்கும்’

சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் ஈ. வெ. கி. சம்பத் விளக்கம்

தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம்.பி. அவர்கள், நாமகிரிப் பேட்டை, சேலம் (வேலூர்), ஆத்தூர், புதுக்கோட்டை, மாயூரம் ஆகிய ஊர்களில் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் விபரம் இங்கு தரப்படுகிறது.

தோழர் சம்பத் அவர்கள் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு பேசுகையில் டெல்லி ஏகாதிபத்தியத்தின் நிலையைச் சித்தரித்தார்.

**நாமகிரிப்பேட்டை :**

26—9—57-ல், இவ்வூரில், தோழர் ஈ.வெ.கி. சம்பத் எம்.பி. அவர்களுக்கு தி. மு. கழகச் சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

அன்று மாலை, தோழர் ஈ. வெ. கி. சம்பத், மற்றும் தோழர்கள் எம். பி. சுப்பிரமணி எம்.எல்.ஏ., சேலம் மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் ஜி.பி. சோமசுந்தரம் ஆகியோரை நாமகிரிப்பேட்டை தி. மு. கழகச் செயலாளர் சி. முத்துகிருட்டினனும், கழகத் தோழர்களும், பொதுமக்களும் வரவேற்று மாலை அணிவித்து, முக்கிய வீதிகளின் வழியே ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். வழியில் பல இடங்களில் தோழர் சம்பத் அவர்களுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன.

ஊர்வலம் முடிந்தபின், நாமகிரிப்பேட்டை தி. மு. க. கிளையைத் தோழர் சம்பத் திறந்து வைத்தார்; தோழர் ஜி. பி. சோமசுந்தரம் கொடியேற்றினர்; 60 அடி உயரத்திலுள்ள பாக்கு மரத்தாலான, கருப்பு—சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட கம்பத்தில் பறந்துகொண்டிருந்த கொடியின் இருமருங்கிலும் இருந்த மின் விளக்குகளை அவர் ஏற்றிவைத்தார்.

பின்னர், அலங்கரிக்கப்பட்ட மேடையில் தோழர் சி. முத்துக்கிருட்டினன் தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கியது. தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள், தேர்தலுக்குப் பின் கழகம் பெற்றுள்ள வலிவையும் பொலிவையும் விளக்கினர்.

அடுத்து, தோழர் சம்பத் அவர்கள், இன்றைய அரசியல் நிலை குறித்தும், டில்லி நிகழ்ச்சிகளை வர்ணித்தும், கழகத்தைப் பற்றி வடநாட்டினர் கொண்டுள்ள கருத்து பற்றியும் அரிய கருத்துரை வழங்கினர்.

கூட்டத்தில் ஒரு குழந்தைக்கு ‘செங்குட்டுவன்’ என்று பெயர் சூட்டினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. கூட்டத்தில் ஏராளமானவர் கூடியிருந்து, அமைதியாகப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

**வேலூர் (சேலம்) :**

28-9-57-ல், வேலூர் (சேலம்) தி. மு. கழகச் சார்பில், வ. உ. சி. திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் வி. ஏ. இராமநாதன் தலைமை வகித்தார்; தோழர்கள் மு. பெ. முத்துக்கருப்பன், கரூர் நகரமன்ற உறுப்பினர் மு. குழந்தைவேல், தாசுர் டி. வி. சுந்தரராசன், வழக்கறிஞர் வி. காளியப்பன் ஆகியோர் பேசினர்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேச எழுந்ததும், வேலூர் தி. மு. கழகச் சார்பில் எஸ். முத்து மாலையிட்டு வரவேற்றார். கபிலர்மலை தி. மு. க., பாண்டமங்கலம் தி.மு.க., ஊஞ்சப்பாளையம் தி.மு.க., சுல்தான் பேட்டை வள்ளுவர் படிப்பகம், குலக்காட்டுபுதூர் தி.மு.க., ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள், மற்றும் பல மன்றங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் சம்பத் அவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு டில்லி மக்கள் சபை நடவடிக்கைகளை விளக்கினர்.

தொடர்ந்து பேசும்பொழுது அவர் கூறியதாவது:—

“இதுவரை எப்படியாகிலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிவிட வேண்டும் என்று முழங்கிக்கொண்டு வந்த நேருகூட, சுதந்தரக் கொண்டாட்டத்தில் பேசுகையில் “போதிய பொருளாதார வசதியின்மையால் முக்கிய திட்டங்களை மட்டும்தான் நிறைவேற்றுவோம், முக்கியமில்லாதவை கைவிடப்படும்” என்று கூறியுள்ளார்; அப்படி ‘முக்கியமான திட்டங்கள்—முக்கியமில்லாதவை’ என்று ஒரு பட்டியல் தயார் செய்வார்கள்; அப்பட்டியலில், ‘முக்கியமில்லாத திட்டங்கள்’ என்ற தலைப்பின்கீழ் தென்னாட்டுத் திட்டங்கள்தான் இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.”

ஊராண்மைக் கழக வரவேற்புக்கு நன்றி கூறுமுகத்தான், வேலூரில் (சேலம்) சர்க்கரை ஆலையின் அவசியத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், இந்த குறுகிய நிலப்பரப்பில் அதிகக் கரும்பு விளைந்தும் அதிக ஆலைகள் இல்லையென்றும், வடக்கே அதிக நிலப்பரப்பில் குறைவான கரும்பு விளைந்தாலும், அதிகமான ஆலைகள் இருப்பதையும் சுட்டிக்காட்டிப் பேசினர்.

கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அன்று மாலை 5 மணிக்கு வேலூர் ‘பங்களாவில்’ தோழர் சம்பத் அவர்களுக்கும் மற்றும் தோழர்களுக்கும் ஓர் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

ஊராட்சி மன்ற வரவேற்பு

மாலை 5-30 மணிக்கு வேலூர் ஊராட்சி மன்றத்தின் சார்பில் மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது. தோழர் எஸ். நாராயணசாமி அவர்கள் தலைமையில் தோழர் கிருஷ்ணசாமி அவர்கள் வரவேற்பு இதழ் வாசித்துக் கொடுத்தார்.

தோழர் சம்பத் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில் “இவ்வூர் மக்கள் மிகவும் பொறுப்புள்ள முறையில் வரவேற்பு கொடுப்பதோடு, சில கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள்; நியாயமான இந்தக் கோரிக்கைக்காக நான் டில்லியில் எடுத்து சொல்லி ஆவன செய்வேன்” என்று உறுதி கூறினர்.

நிர்வாக அதிகாரி திரு. சிங்காரம் மற்றும் உறுப்பினர்களை அறிமுகப்படுத்திவைக்கப்பட்டது.

**ஆத்தூர் :**

5—10—57 இரவு 7 மணிக்கு, சேலம் மாவட்டம் ஆத்தூர் சந்தைப்பேட்டைத் திடலில், தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. முத்து தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் டி. இருசப்பன் எம்.எல்.ஏ., எம். பி. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ., சிற்றுளி-சுப்பிரமணியம், குப்புசாமி ஆகியோர் பேசியபின், பலத்த காரொலிகளுக்கிடையே தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம்.பி., அவர்கள் பேச எழுந்தார்; பல ஊர்க் கிளைக் கழகங்களின் சார்பில் அவருக்கு மலர் மாலைகளணிவிக்கப்பட்டன.

பின்னர், தோழர் சம்பத் அவர்கள் தற்கால அரசியல் நிலை குறித்து சொற்பொழிவாற்றினர்; சுமார் 5,000 பேர் கூடியிருந்து பேச்சை அமைதியான முறையில் கேட்டார்கள். கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**புதுக்கோட்டை :**

6—10—57 காலை 10 மணிக்கு, தி. மு. க.—மாணவர் கிளையின் 4-வது ஆண்டு விழாக் கூட்டம், நகர மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது; தோழர் சின்னராசா தங்கவடிவேல் தலைமை வகித்தார்; தோழர் அப்துல் கரீம், தலைவரையும், தோழர் சம்பத் எம்.பி. அவர்களையும் வரவேற்றார்; தோழர் இராதா, வருகிற இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றியும், மாணவர்களின் பங்கு பற்றியும் பேசி இந்தி எதிர்ப்புத் தீர்மானங்களை மக்களின் கர ஒலிகளுக்கிடையே வாசித்து நிறைவேற்றினர்.

பிறகு சம்பத் அவர்கள் பேச எழுந்தவுடன் பல அமைப்புகளாலும், கழகக் கிளைகளாலும், மன்றங்களாலும் ஏராளமான மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் சப்பத் அவர்கள் பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழக மாணவர் கிளை குறிக்கோள் தோற்றம், கொள்கை—கோட்பாடு பற்றியும், மத்திய அரசாங்கத்தின் கைப்பாவையாக மாநில அரசாங்கங்கள் ஆடுவதைப் பற்றியும், திராவிட நாடு பிரிய வேண்டிய அவசியத்தைப் பற்றியும், மத்திய அரசாங்கத்தின் இந்தி ஏகாதிபத்தியக் கொள்கை பற்றியும், அதனை எதிர்க்குமுகத்தான் தி. மு. கழகம் மேற்கொள்ளவிருக்கும் மாபெரும் போராட்டத்திற்கு ஒத்திகை பார்க்கும் முறையில் அக்டோபர் 13 — ‘இந்தி எதிர்ப்பு நாள் கொண்டாடுவதாகவும், இந்தி எதிர்ப்பில் மக்களுடைய—முக்கியமாக மாணவர்களின் பங்கு பற்றியும் விரிவாகவும், சிறப்பாகவும் கருத்துரை வழங்கினர்கள்.

**மாயூரம் :**

10—10—57 மாலை, மாயூரம் நகர தி. மு. கழகச் சார்பில் மாயூரம் நகரப் பூங்காவில் நகரச் செயலாளர் தோழர் என். கிட்டப்பா தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் சி. கிருஷ்ணமூர்த்தி பேசியபின், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பாராளுமன்ற நடைமுறைகள் பற்றியும், வடவரின் இந்தி ஏகாதிபத்திய வெறி உணர்ச்சியைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத் துவக்கத்தில் நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் சம்பத் அவர்களுக்கு வரவேற்பு இதழ் ஒன்றை தோழர் கே. எஸ் சௌந்தரராசன் படித்தளித்தார்; தோழர்கள் என். கிட்டப்பா, சி. கிருஷ்ணமூர்த்தி, ஈ. வெ. கி. சம்பத் ஆகியோருக்கு உள்ளூர்—வெளியூர் தி. மு. கழகக் கிளைகளும், துணை அமைப்புகளும் ஏராளமான மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவித்தன.

கூட்டத்தில் தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்கள், தோழர் நாராயணசாமி அவர்களின் ஆண் குழந்தைக்கு ‘செங்குட்டுவன்’ எனப் பெயரிட்டார். இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 தரப்பட்டது.

---

★★★★★★★★★★★★★★★★★

# ‘ஹோம்லண்ட்’

(HOMELAND)

★

Homeland — சென்னையிலிருந்து வெளிவர ஏற்பாடாகி விட்டது; அதற்கான அனுமதி கிடைத்துவிட்டது; துவக்க வேலைகள் முடிந்து கொண்டு வருகின்றன.

Homeland—‘நம் நாடு’ அலுவலகத்திலிருந்து இனி வெளி வரும்.

Homeland இதழ் சம்பந்தப் பட்ட கடிதங்கள், மணியார்டர்கள், இன்ஷூயூர்கள், செக்குகள் முதலியன இனி,

சி. என். அண்ணதுரை,
Homeland அலுவலகம்
‘அறிவகம்’—இராயபுரம்
சென்னை-13.

என்ற முகவரிக்கு அனுப்பக் கோருகிறேன்.

‘திராவிட நாடு’ சம்பந்த மானவைகளை, வழக்கம்போல் காஞ்சீபுரம் முகவரிக்கு அனுப் பவும்.

Homeland — சென்னையிலிருந்து அக்டோபர் 27-ல் வெளிவரும்.

வாசகர்களும், ஏஜெண்டுகளும், இந்தத் தாமதம் பொறுத்திட வேண்டுகிறேன்.

அன்பன்

**அண்ணதுரை**

★★★★★★★★★★★★★★★★★

---

# வறுமைப்பிணியிலிருந்து புலவர்களை விடுவிக்க வேண்டும்

## வாழ்நாளிலேயே அவர்களைக் கௌரவிப்பதே சிறந்ததாகும்

### பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் படத் திறப்பு விழாவில் தோழர்கள் வேண்டுகோள்

சென்னை—சேப்பாக்கம் அழகிரி நினைவு மன்றத்தின் சார்பில் 12—10—57 மாலை 6 மணியளவில் சேப்பாக்கம் அழகிரி திடலில், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களின் படத் திறப்பு விழா தோழர் நீலநாராயணன் தலைமையில் நடைபெற்றது.

விழாத் துவக்கத்தில் பேசிய தோழர் என். சீவரத்தினம் அவர்கள், ‘நாடு, ஒரு நல்லறிஞரை சட்டமன்றத்திற்கு அனுப்பும் வாய்ப்பை சில வாக்குகள் குறைவால் சென்ற தேர்தலில் இழந்துவிட்டது’ என்று குறிப்பிட்டார்.

அடுத்து பேசிய தோழர் கி. மனோகரன், தானும் அப்பாதுரையாரும் நேரிடையாக நெருங்கிப் பழகியது சொற்பகாலமேயாயினும் அவருடைய புத்தகங்கள் பலவற்றை வாங்கி வாசித்துள்ளதாகவும், மிக்க அறிவுத்திறனும் கருத்துத் தெளிவும் பெற்று, பல மொழிகளில் வல்லுனராக உள்ள இத்தகைய அறிஞர்களை அவர்களின் வாழ்நாட்களிலேயே கௌரவிப்பதுதான் மனித பண்புக்கு ஏற்றது என்பதைச் சுட்டிக்காட்டியும், இத்தகைய அறிஞர்களால் போற்றி வளர்க்கப்படும் தமிழை அழிக்கவரும் இந்தியை விரட்டியடிப்பதில் தமிழர்கள் எல்லோரும் ஒத்துழைக்க உறுதி கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

கடைசியாகத் தோழர் கண்ணதாசன் அவர்கள், அப்பாதுரையாரின் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“தமிழ்நாட்டிலே பண்டைக் கால முதல் புலவர்களைப் பீடித்துவரும் வறுமைநோய் தற்காலத் தமிழறிஞர்களையும் விடாமல் தொத்திக்கொண்டு வருகிறது; எனவே, இந்நிலையைப் போக்க அப்பாதுரையார் போன்ற அறிஞர்களுக்கு விழாக்கள் நடத்தி, நல்ல தொகை நிதி அளித்து அவர்களை ஊக்குவிக்கவேண்டும்; அதற்காகவே அப்பாதுரையார் அவர்களுக்கு மணிவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; அவ்விழாவில் ரூ. 25,000-க்குக் குறையாமல் நிதி அளிக்க, தமிழர்கள் அனைவரும் உதவவேண்டும்.”

இரவு 10 மணியளவில் தோழர் பி. கே. கோவிந்தனால் தயாரிக்கப்பட்ட ‘வாழட்டும்’ என்ற நாடகம் இரா. இளம்பரிதி குழுவினரால் திரளான மக்களின் முன்னிலையில் நடிக்கப்பெற்றது.

---

# சென்னை 16-வது வட்ட தி. மு. க. பொதுக்கூட்டம்

## என். வி. நடராசன், கி. மனோகரன் கலந்துகொண்டனர்

சென்னை, அக். 17—

சென்னை 16-வது வட்ட தி.மு. கிளையின் இரண்டாம் ஆண்டு விழாவையொட்டி 11—10—57 மாலை 6-30 மணிக்கு பெருமாள் கோவில் தோட்டம் தெரு, முதல் சந்தில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் வா. ப. சின்னையா தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் சி. பஞ்சாட்சரம், ப. ஆசைமுத்து, நாகராசன், பி. எம். கருணாகரன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் 1937-ம் ஆண்டைய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை விளக்கியும், இன்று மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் துவக்கும் நிலையில் தி. மு. கழகம் இருப்பதை எடுத்துரைத்தும், நாம் ஏன் இந்தியை எதிர்க்கிறோம் என்பதற்கான காரண காரியங்களை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

இறுதியாகத் தோழர் கி. மனோகரன் அவர்கள் பேசுகையில், தி. மு. கழகத்தைப் பற்றி மந்திரிகளும், மற்றக் காங்கிரஸ்காரர்களும் மட்டரகமாகத் தூற்றித் திரிவதைப் பற்றிக்கூறி, அவர்களுடைய தூற்றுதல்களினால் கழகம் அழிந்துவிடாது என்றும், பதிலுக்கு நாமும், அவர்களை மட்டரகமான முறையில் தூற்ற விரும்பவில்லை யென்றும் எடுத்துரைத்தார்.

அவர் மேலும் பேசுகையில், தமிழ் தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்கும் வடநாட்டு ஆதிக்கக் கும்பலின் சதிச் செயலை பல ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினர்.

கூட்டத் துவக்கத்தில் தோழர் இலக்குமிபதியும், மற்றும் இரு சிறுமிகளும் இயக்கப் பண்கள் பாடினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றிகூறலுடன் இரவு 9-45 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

---

## சட்ட மன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்

டோக்கியோ, அக். 21—

ஜப்பான் சட்டமன்ற உறுப்பினர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்; விபசார ஒழிப்புச் சட்டம் வராமலிருப்பதற்காக அவர்கள், பணம் பெற்றுப்பாடுபட்டுள்ளனராம்.

14 போலீஸ் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது; இலஞ்சம் பெற்று விபசாரத்திற்கு ஊக்கமளித்து வந்தவர்களாம், இவர்கள்!

அடுத்த எப்ரல் முதல் ஜப்பானில் விபசாரத்திற்கு எதிராகச் சட்டம் அமுலாகிறது!

## ...ப்பழத்துக்கு 'அப்பீல்' அனுமதி

சென்னை, அக். 21—

கே. வி. கே. சாமி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று சிறையிலிருந்துவரும் ஆர். எஸ். தங்கப்பழத்துக்கு, தனக்களிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ள விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## இந்தியாவுக்கு நேபாளமும் உதவிபுரியாது!

### உணவுத் தானியங்கள் ஏற்றுமதிக்குத் தடை

காட்மண்டு, அக். 21—

நேபாளத்திலிருந்து உணவுத் தானியங்கள் ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்து நேபாள அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

திபெத்திற்கும் — இந்தியாவுக்கும் அரிசி கள்ளக்கடத்தல் செய்யப்படுகிறதாம்; இந்தத் தடை உத்தரவு அந்த நிலையை நீக்குமாம்!

விவசாயிகளுக்குத் தேவையான அளவுக்கு அதிகமாக உள்ளதை அருகாமையிலுள்ள அரசாங்க அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும் என்று அதே உத்தரவில் காணப்பட்டுள்ளது.

நேபாளத்தில் மழை இல்லாத காரணத்தினால் நல்ல விளைச்சல் இல்லையாம்; உணவுப் பற்றுக்குறை நிலை உருவாகியுள்ளதாம். நேபாள திட்ட அமைச்சர் திரு; சர்மா விரைவில் பர்மா சென்று அரிசி கொள்முதல் செய்வாராம்.

இதனால், இந்தியப் பேரரசின் உணவு நிலையும் பாதிக்கப்படக்கூடும் என்று கருதப்படுகிறது.

## 'உணவுத் தேவையை மீண்டும் மதிப்பிடவும்'

### மாநிலங்களுக்குப் புதுடில்லி தாக்கீது பிறப்பித்துள்ளதாம்!

சுற்றுப்பயணம் செய்துவிட்டு, புதுடில்லி திரும்பிய 24 மணி நேரத்தில் பண்டித நேருவுடன் மத்திய உணவு அமைச்சர் ஜெயின், நாட்டின் உணவுப் பற்றுக்குறை பற்றி கலந்து பேசியுள்ளார்.

மத்திய அரசாங்க உணவுக் கிடங்குகளுக்கு மொத்தம் 5 இலட்சம் டன் மட்டரக அரிசியும், 7½ இலட்சம் டன் தரமான அரிசியும் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டிருந்ததாம்.

ஆனல், உள்நாட்டில் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாம்.

மழை இல்லாத காரணத்தினால் விளைச்சல் இல்லை—விளைச்சல் இல்லாததால் எதிர்பார்த்த அளவுக்கு அறுவடையின்போது கொள்முதல் செய்வதற்கில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

உழவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், கொள்முதல் செய்ய விலையை நிர்ணயிப்பது என்றும், நியாய அடிப்படையில் கிடைக்கும் அரிசியைக் கொள்முதல் செய்யவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரிசா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் விளைச்சலில் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளதாம்.

தற்போது மத்திய அரசாங்கக் கிடங்குகளில் 5 இலட்சம் கோதுமையும், 2½ இலட்சம் டன் அரிசியும் மட்டுமே உள்ளதாம்.

இப்போதுள்ள நிலையை ஆராய்ந்து உணவுக் கையிருப்பு, தேவை முதலியவற்றை மீண்டும் மதிப்பிட்டு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்புமாறு மாநிலங்களுக்கு புதுடில்லி தாக்கீது பிறப்பித்துள்ளது.

மேலும், அமெரிக்காவிடமிருந்தும், கனடா நாட்டிலிருந்து உணவுத் தானியம் சேகரிக்க இந்தியப் பேரரசு முனையக்கூடும் என்றும் தெரியவருகிறது.

★★★★★★★★★★★★★★★★★★

## 'மித்திரன்' இதழுக்கு மறுப்பு

★

பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சேலம் மாவட்டம் வேலநத்தம் கிராமத்தில் 15-10-57ல் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் ஆற்றிய சொற்பொழிவின் ஓர் பகுதியைச் 'சுதேசமித்திரன்' இதழ் தனது 20-10-57-ஆம் நாள் இதழில் வெளியிட்டிருக்கிறது.

அந்தச் செய்தியில், கடவுட்தன்மையைப் பற்றிப் பொதுச்செயலாளர் அவர்கள் பேசியதாக வெளியிட்டிருக்கும் செய்தி அவர்கள் பேசியதற்கு நேர்முரணாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் கடவுட்தன்மை குறித்து, அவர் பேசிய வாசகங்களையும் கீழே கொடுத்திருக்கிறோம்.

"கடவுள் வேண்டாம் என்றோ, கூடாது என்றோ நாம் சொல்லவில்லை; 'அன்பே கடவுள்' என்பதாக இருந்தாலும் சரி; 'அறிவே கடவுள்' என்பதானாலும் சரி; இருக்கட்டும். நாம் கண்டிப்பதெல்லாம், மூடப்பழக்கவழக்கங்களை அடிப்படையாகக்கொண்ட கடவுள் தன்மையைத்தான்."

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

★★★★★★★★★★★★★★★★★★

## அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.
24 : நீடூர்
25 : கொருக்குப்பேட்டை
26 : சென்னை—மயிலாப்பூர்
27 : நாகப்பட்டினம்
29 : சென்னை—புரசவாக்கம்
30 : கோடம்பாக்கம்
நவ.
1 : கூடுவாஞ்சேரி

## ஆதம்பாக்கம் தி. மு. க.

துவக்க விழா—கட்டிடத் திறப்பு

### இரா. நெடுஞ்செழியன் கலந்து கொள்கிறார்

23—10—57 மாலை 5 மணிக்கு ஆதம்பாக்கம் தி. மு. கழகக் கிளையின் துவக்க விழாவும், கட்டிடத் திறப்பு விழாவும், தோழர் தி. ந சம்பந்தம் தலைமையில், செருப்பு மேடை மைதானத்தில் நடைபெறும்.

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கட்டிடத்தைத் திறந்து வைப்பார்; தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. கொடியேற்றுவார்; நடிகர் என். எஸ். நாராயணன், கே. எஸ். புகாரி மற்றும் பலர் பேசுவர்.

## 'அறிவகம்' துவக்க விழா

23—10—57 காலை 10மணிக்கு சென்னை (12), எத்திராச தோட்டம் வீதி, 23 எண்ணுள்ள மனையில் தோழர் அ. உலகநாதன் தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர் சோ.சுந்தரவடிவேலன், மற்றும் பலர் பேசுவர்.

## சென்னைக்கு மேலும் 5 தொழில் காலனிகள்

சென்னை, அக். 21—

சென்னை மாநிலத்தில் ரூ. 25 இலட்சம் செலவில் மேலும் 5 தொழில் காலனிகள் நிறுவ அனுமதிக்க வேண்டுமென்று சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கேட்டுள்ளது.

மதுரை, திருச்சி, கோவை, கன்னியாகுமரி, நெல்லையைச் சேர்ந்த பேட்டையிலும் இந்தக் காலனிகளை நிறுவ சென்னை அரசு முடிவு செய்துள்ளதாம்.

# பாங்கி ஊழியரிடையே பொதுச்செயலாளர் முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தோடு, மேலும் 25 சதவிகிதம் சேர்த்துக் கொடுக்கவேண்டும் என்றுதான் பாங்கி ஊழியர்கள் கேட்கிறார்கள்; இப்படிக் கொடுப்பதற்குத் தடை என்ன இருக்கிறது?

"பொதுவாகப் போர்க்காலங்களில்தான் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு, பண்டங்களின் விலைகள் உயருவதும் அதன் சாக்கில் பதுக்கிவைத்தல்—கள்ள மார்க்கெட் போன்ற செயல்களில் ஈடுபட்டு வியாபாரிகள் கொள்ளை இலாபமடிப்பதும், இதன் விளைவாகத் திடீர்ப் பணக்காரர்கள் உண்டாவதும் வழக்கம். ஆனல் இந்த நாட்டிலோ, போர்க்காலத்தைவிட, போர் முடிந்து இந்த 10—12 ஆண்டுகளில்தான் ஏராளமான புதுப் பணக்காரர்கள்—திடீர்ப் பணக்காரர்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். சண்டைக் காலத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் திடீர்ப் பணக்காரர்களானர்கள் என்றால், இப்பொழுது ஆயிரக்கணக்கான திடீர்ப் பணக்காரர்கள் இருக்கிறார்களே! இது எப்படி முடிகிறது? 4,000, 5,000 ரூபாய்க்குரியவர்களாக இருந்தவர்களெல்லாம் இப்பொழுது 4 இலட்சம், 5 இலட்சம் ரூபாய்க்கு அதிபதிகளாயிருக்கிறார்களே! இது எப்படி முடிகிறது? இதைத் தடுக்க முடியவில்லை இந்த நாட்டு அரசாங்கத்தால்! பணக்காரர்கள் உற்பத்தியாவதற்குத்தான் வழி செய்கிறது சர்க்கார்! விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தினால் இந்த நிலை ஏற்படுமா?

"விலைவாசி உயர்வு காரணமாகவே, ஊழியர்கள் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ள கிளர்ச்சி செய்கிறார்கள். தபால்—தந்தி ஊழியர்கள் அனைவரும் ஒன்றுபட்டுக் கிளர்ச்சி செய்ததன் விளைவாகத்தான் அரசாங்கம் ஓரளவு அவர்கள் பிரச்சினையைக் கவனிக்க முன்வந்திருக்கிறது.

"நாட்டின் மிக முக்கிய-இன்றியமையாத சாதனங்களாக விளங்குபவை தபால்—தந்தி, இரயில்வே இலாகாக்கள், பாங்கிகள்தான்; குறிப்பாக, பாங்கிகள் இயங்கினால்தான் நாடே இயங்கும்; பாங்கிகள் வேலைநிறுத்தம் செய்தால் நாட்டில் எதுவும் இயங்க முடியாது; அரசாங்கமே இயங்க முடியாது.

"எனவே, இரயில்வே, தபால்—தந்தி, பாங்கு ஆகியவற்றின் ஊழியர்கள் கிளர்ச்சி செய்தால்தான் அரசாங்கம் சற்று அசைந்து கொடுக்கும். இவர்களைத் தவிர்த்து, மற்ற ஊழியர்கள் எவ்வளவு கிளர்ச்சி செய்தாலும் சர்க்கார் சட்டைசெய்யாது. ஆரம்ப ஆசிரியர்களும், தாலூகா ஆபீஸ், வருமான வரி ஆபீஸ் குமாஸ்தாக்கள் வேலைநிறுத்தம் செய்தாலா இந்த அரசாங்கம் பணிந்துவிடும்? அவர்கள் மிரட்டியா அரசாங்கம் மிரண்டுவிடும்? 'ஆரம்ப ஆசிரியரோ, தாலூகா ஆபீஸ் குமாஸ்தாக்களோ வேலைக்கு வராவிட்டால் பரவாயில்லை — இரண்டு மூன்று மாதமானாலும் சரி' என்று ஆட்சியாளர்கள் இருந்துவிடுவார்கள்; அந்த வேலைகள் கொஞ்ச காலத்திற்குத் தடைப்பட்டாலும் அவர்களுக்குக் கவலையில்லை; ஆனல், பாங்கி ஊழியர்கள் ஒரு நாளைக்கு வேலை செய்யவில்லையானல் அதனல் பலவகையிலே நஷ்டமேற்படும்.

"இதனல்தான் கூறுகிறேன்—பாங்கி ஊழியர்களாகிய நீங்கள்தான் பிற ஊழியர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக முன்னணியில் நின்று, அனைவரும் ஒன்றுபட்டு கிளர்ச்சி செய்யவேண்டும். உங்களுக்கு வெற்றி கிட்டுமானல் 'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் பாய்வது' போல, மற்ற ஊழியர்களுக்கும் ஏதேனும் பயன் கிட்டலாம்.

"இன்றைக்கு வங்காளம்தான் எந்தப் போராட்டத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தமிழ்நாடும் இப்பொழுது ஓரளவு உணர்ச்சியும் எழுச்சியும் பெற்று ஒற்றுமையுணர்ச்சியைக் காட்டி வருகிறது. இதை நாம் தபால்—தந்தி ஊழியர்கள் போராட்டத்தின்போது பார்த்தோம். இன்றையத்தினமும் இங்கு, எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் ஒன்றுகூட்டி உங்கள் பிரச்சினைகளை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டவும், பொதுமக்கள் புரிந்து கொள்ளும்படிச் செய்யவும் நீங்கள் ஊக்கமும் உணர்ச்சியும் பெறவும் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். இதுவே, நம் ஒற்றுமைக்கு அறிகுறியாக உள்ளது. நீங்கள் அனைவரும் ஒற்றுமையோடு மட்டுமல்ல—உள்ள உரமும், நெஞ்சுறுதியும் கொண்டு போராட வேண்டும். இதற்கு உங்களுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது.

"கோழைகளாக—தொடை நடுங்கிகளாக நீங்கள் மாறிவிடக்கூடாது. ஒரு நல்ல—நியாயமான காரியத்துக்காக நீங்கள் கிளர்ச்சி செய்வதில் தவறில்லை. நாம் அனைவரும் 70—80 வயதுவரை வாழ்வோம் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை; திடீரென மாரடைப்பாலோ, டைபாய்டு காய்ச்சலாலோ, தெருவிலே நடந்து செல்லும்போது வாழைப் பழத்தோல் சறுக்கி விழுவதாலோ சாவதைவிட, 'ஒரு நியாயமான போராட்டத்தில் ஈடுபட்டோம் — இறந்தோம்' என்ற திருப்தியோடு இறக்கலாம்.

"ஈடுபட எண்ணமில்லாதவர்கள் அதற்கு உதவி செய்யாவிட்டாலும் ஊறு தேடாமலிருக்கலாம்; கெடுதல் செய்யாமல் ஒதுங்கி நிற்கலாம்.

"இந்த நேரத்தில் உங்கள் உணர்ச்சியைத் தளர விட்டுவிட்டால் பிறகு, சர்க்காருக்கு இடம் கொடுத்ததாகிவிடும். எனவே, உங்கள் உணர்ச்சியையும் எழுச்சியையும் ஒன்றுதிரட்டி, சர்க்கார் எத்தகைய அடக்குமுறையைக் கையாண்டாலும், பொறுமையுடன் அதை ஏற்று, இறுதிவரை போராடு வீர்களானல் வெற்றி நிச்சயம் உண்டு.

"அடக்குமுறையை நம்பி வாழும் சர்க்கார் நிலைக்காது. கடுமொழியைப் பயன்படுத்தினல், அதுவே அவர்களை அறுக்கும் அரம் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அதைப்போல சர்க்காருக்கு அவர்களது செயலே அவர்களை அழிக்கும் படையாக மாறும்.

"மிதிக்கப்படும் பழு எழுவதுபோல், அடிக்கப்படும் பூனையும் புலியாக மாறுவது போல், அரைக்கப்படும் சந்தனமும், புகைக்கப்படும் அகிலும் மணங்கமழ்வதுபோல், ராவப்படும் வைரம் ஒளிவிடுவதுபோல், தாக்கப்பட தாக்கப்பட வளருவது தொழிலாளர் இயக்கமாகும்.

"ஆகவே, நீங்கள் எதற்கும் அஞ்சாமல் போராடி வெற்றி பெறுவீர்களாக! உங்கள் உள்ளங்ளெல்லாம் வாழ்க! தொண்டுகளெல்லாம் வளர்க! முயற்சிகளெல்லாம் வெல்க!—என வாழ்த்துகிறேன்."

★

### நிகழ்ச்சி

சென்னை மாநில பாங்கி ஊழியர் சம்மேளனத்தின் சார்பில் கூட்டப்பட்ட இக்கூட்டம் 18—10—57 மாலை 6 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில் தோழர் ஆர். வி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் தோழர் ஜனார்த்தனம் பிள்ளை பாங்கி ஊழியர்களின் கோரிக்கைகளை வற்புறுத்தும் தீர்மானங்களை முன்மொழிந்து, மக்கள் ஆதரவுடன் நிறைவேற்றினர்.

தோழர்கள் ஆர். இராமநாதன், சாமுண்டீசுவரன், இலட்சுமணன், மோகன் குமாரமங்கலம், ஜி. உமாபதி, தோழியர் எஸ். விஜயலட்சுமி ஆகியோரும் கலந்துகொண்டு, பாங்கி ஊழியர்களின் கோரிக்கைகளை வற்புறுத்திப் பேசினர்.

## இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

அக்.
25 : மாலை—நெல்லிக்குப்பம்
26 : காலை—பழனி
மாலை—சத்திரப்பட்டி
இரவு—சின்னாளப்பட்டி
27 : காலை—கச்சமங்கலம்
மாலை—மன்னார்குடி
இரவு—கொரடாச்சேரி
28 : மாலை—காரைக்குடி
அழகப்பா கலைக் கல்லூரி
அழகப்பா பொறியியற் கல்லூரி
இரவு—வேட்டன்விடுதி
29 : காலை—இணைங்கனூர்
மாலை—தென்னிலை
இரவு—கரூர்
30 : காலை—இருங்களூர்
மாலை—திருமானூர்
இரவு—அரியலூர்
31 : மாலை—சென்னை

## சிதம்பரம் வட்டத்தில் மு. கருணாநிதி கே. ஏ. மதியழகன் தில்லை-வில்லாளன்

சுற்றுப்பயணம்

2—11—57, 3—11—57

சனி, ஞாயிறு நாட்களில் சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த அண்ணாமலை நகர், காட்டுமன்னார்குடி, குமராட்சி, வல்லம்படுகை, வட்டத்தூர் முதலிய ஊர்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் தோழர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன் ஆகியோர் கலந்துகொள்வர். விரிவான சுற்றுப்பயண நிகழ்ச்சி பின்னால் அறிவிக்கப்படும்.

## நீர்வளூர் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா

அண்ணா கலந்துகொள்வார்

24—10—57 மாலை 5 மணிக்கு காஞ்சிபுரம் நீர்வள்ளூர் கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கட்டிடத் திறப்பு விழா திரு கோவிந்தராசலுநாயுடு எம். பி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அண்ணா அவர்கள் கட்டிடத்தைத் திறந்து வைப்பார்கள்.

தோழர்கள் அ. க தங்கவேலர். கு. சிதம்பரம்பிள்ளை, சி. வி. எம், அண்ணாமலை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அன்று இரவு 9 மணிக்கு பல்லி கிராமம் பி. சே. துரைசாமி-கலைச்செல்வி நாடகக் குழுவினரால் டி. டி. சிட்டிபாபு இயற்றிய "கலிங்கராணி" என்ற நாடகம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.